## இந்தியர்கள் வாழும் - நடமாடும் பகுதிகளில்

# தீபாவளி அலங்காரம் எங்கே? வண்ண விளக்குகள் எங்கே?

கோலாலம்பூர், அக். 28-
தீபாவளிக்கு இன்னும் 2 தினங்களே இருக்கின்ற நிலையில் நாட்டில் குறிப்பாக கோலாலம்பூர் மாநகரில் தீபாவளி அலங்காரங்கள் இல்லாமல் போனது ஏன் என பலர் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

குறிப்பாக இந்தியர்கள் அதிகம் கூடுகின்ற அதிகம் வாழ்கின்ற செந்தூல், பிரிக்பீல்ட்ஸ், பங்சார், லெபோ அம்பாங் வணிகத்தலம் உட்பட அது சார்ந்த ஜாலான் மஸ்ஜிட் இந்தியா

பக்கம் 13



கோப்புப் படம்

## முதல்பக்கத் தொடர்ச்சி...

### இந்தியர்கள் வாழும்- நடமாடும் பகுதிகளில்

## தீபாவளி அலங்காரம் எங்கே?

வட்டாரம் உட்பட எந்த ஓர் இடத்திலும் தீபாவளியை வரவேற்பு தோரணங்களோ அலங்கார விளங்குகளோ இப்படி எதுவுமே இல்லை என்பது தங்களுக்கு வேதனை அளிப்பதாக மாநகர மக்கள் பலர் தெரிவித்தனர்.

வருடத்தில் ஒரு நாள் வருகின்ற தீபாவளிக்கு மாநகர மன்றம் கடந்த காலங்களில் பல இடங்களில் அலங்கார ஏற்பாட்டை செய்வதுண்டு. ஆனால் இந்த முறை அது ஏன் செய்யப்படவில்லை என்பதும் புரியாத புதிராக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நாடு பல இனங்களின் கலை கலாச்சார சமய பண்பாட்டு அடையாளங்களை கொண்டது. வேற்றுமையிலும் ஒற்றுமை என்பது நமது தொன்று தொட்ட கலாச்சாரமாக இருக்கிறது. எனவே அதை எடுத்துச் சொல்லும் விழாக்கால சிறப்புகளை குறிப்பாக அந்த அலங்காரத்தை செய்ய வேண்டிய பொறுப்பு மாநகர மன்றத்தின் கீழ் இருக்கிறது என்று பலர் சுட்டிக்காட்டினர்.

இதனிடையே இது குறித்து கருத்துரைத்த ம.இ.கா.வின் தேசிய உதவித் தலைவர் டத்தோ டி.முருகையா கோலாலம்பூர் மாநகர மன்றம் தீபாவளி அலங்காரத்தை பல இடங்களில் மேற்கொள்ளாமல் இருப்பது இந்திய சமுதாயத்தை வருத்தமடைய செய்திருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலும் இந்த அலங்காரங்கள் என்பன இந்திய சமுதாயத்தின் ஆதரவுக்கும் அவர்களின் விழாவுக்கும் காட்டுகின்ற ஒரு நன்றியும் மரியாதையும் ஆகும். குறிப்பாக கோலாலம்பூர் ஜாலான் பத்து 2 1/2 மைலிலும் ஜாலான் கோவில் ஹிலிர் செந்தூல் போன்ற பகுதிகளில் தீபாவளி அலங்காரம் இல்லாமல் இருப்பது ஏன் என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தியர்கள் அதிகமாக வாழ்கின்ற அல்லது நடமாடுகின்ற இடங்களில் இது போன்ற விழாக்கால அலங்காரங்களைச் செய்தால் அது நமது நாட்டின் ஒற்றுமையின் அடையாளமாக விளங்கும். நாட்டுக்கு வரும் சுற்றுப்பயணிகள் இந்த நாட்டின் பன்முக கலாச்சாரத்தின் சிறப்பை அறிவார்கள்.

இது கூட நாட்டின் சுற்றலாத்துறை வளர்ச்சிக்கு ஓர் அங்கமாக அமையும். இன்னும் இரண்டே தினங்கள் உள்ள நிலையில் எந்த தீபாவளி அலங்காரமும் மாநகரில் இல்லை என்பது பெரும் வருத்தமளிப்பதாக அமைகிறது. எனவே மாநகர மன்றம் இதில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.